| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| உறுப்பினர்-செயலர், | ஆணையாளர், |
| சென்னைப்பெருநகர் வளர்ச்சிக் குழுமம், | சென்னை மாநகராட்சி, |
| எண்.1 காந்தி இர்வின் சாலை, | சென்னை-600 003. |
| எழும்பூர், சென்னை-8. | |

கடித எண். பி3/29202/05 நாள் 1.11.06.

அய்யா,

பொருள்: சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் - திட்டஅனுமதி - நகர நிலஅளவை எண்.39, பிளாக் எண்.16, சிறுவள்ளூர் கிராமம், புதிய கதவு எண்.49 மற்றும் 50, சிறுவள்ளூர் சாலை, பெரம்பூர், சென்னை-7இல் வாகன நிறுத்தத் தளம் +4 தளங்கள் கொண்ட 7 குடியிருப்பு/வணிகக் கட்டிடம் ஒப்பளிக்கப்பட்டிருப்பது - தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப்பிரிவு எண்.1210/05இல் 6.12.2005 அன்று பெறப்பட்ட திட்டஅனுமதி விண்ணப்பம்
2. இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித எண். நாள் 2.2.06.
3. மனுதாரரின் கடித எண். நாள் 29.3.06.
4. இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித எண் நாள் 12.7.06.
5. மனுதாரரின் கடித எண் நாள் 14.7.06.
6. இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித எண். நாள் 12.10.06.
7. மனுதாரரின் கடித எண் நாள் 19.10.06.

...

நில அளவை எண்.39, பிளாக் எண்.16, பெரம்பூர் கிராமம், புதிய கதவு எண்.49 மற்றும் 50, சிறுவள்ளூர் சாலை, சென்னை-7இல் வாகன நிறுத்தத்தளம் + 4தளங்கள் கொண்ட குடியிருப்புகள்/வணிகக் கட்டிடம் 7 குடியிருப்புகள் மற்றும் வணிக உபயோகம் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு, பார்வை-1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை6- இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை6- இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு ரசீது எண். சி 15365, நாள் 19.10.2006இல் கீழ்க்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : ரூ. 13,600/- |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | : ரூ. 950/- |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | : ரூ. 42,500/- |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | : ரூ. 10,000/- |
| மொத்தம் | ரூ. 67,050/- |

3. அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்காக, மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்ற வாரியம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ. 53,150/- (ரூபாய் ஐம்பத்து மூன்றாயிரத்து நூற்றி ஐம்பது மட்டும்) க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது 19.10.2006 நாள் கடிதத்துடன் கொடுத்துள்ளார்.

த.பி.பா.

ஆ) கழிவுநீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அனுமதியைப் பெற்றபின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீரும் சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றப்பிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்தபின்தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல்நிலைத் தொட்டிகளும் கழிவுநீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதாரமுறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும். அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

5. எஸ்.பி/சிறப்புக் கட்டிடம்/468/2006, நாள் 1.11.2006என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன்அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 1.11.2006 லிருந்து 31.10.09 வரை செல்லுபடியாகும்.

6. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்றப்பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. கட்டிடம் கட்டுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) 2/11/06

உறுப்பினர்-செயலருக்காக

2-11-2006

இணைப்பு: 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்
2. திட்ட அனுமதியின் 2 படிகள்

நகல்: 1. திரு எஸ். செல்வராஜ்,
எண்.15, ராஜாபாதர் தெரு,
பெரம்பூர், சென்னை-17.

2. உறுப்பினர்,
உரியத்துறை (Appropriate Authority)
108 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

3. வருமானவரி ஆணையர்,
168 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

4. துணை திட்டஅமைப்பாளர்,
செயலாக்கப் பிரிவு,
செ.பெ.வ.குழுமம், சென்னை-8.